
# திராவிடத்தால் வாழ்கிறோம்

779

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

2

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**



# நீதியும், நீதிமன்றங்களும்!!

‘நீதி’ என்ற சொல் மீதும், ‘நீதி’யின் மீதும் கலைஞருக்கு ஓர் ஈர்ப்பு எப்போதும் இருந்து வந்திருப்பதை நம்மால் உணர முடிகிறது. இதனை அவரது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளை **‘நெஞ்சுக்கு நீதி’** என்ற பெயரில் அவர் எழுதியிருப்பதிலிருந்து, நாம் இவ்வாறு குறிப்பிடுவதாக சிலர் நினைக்கலாம். ஆனால், அதனால் மட்டும் நாம் அவ்வாறு கருதவில்லை, அவரது தயாரிப்பு மற்றும் திரைக்கதை வசனத்தில் வந்த திரைப்படங்களைத் தொடர்ந்து கவனிக்கும் போது, **‘நீதிக்குத் தண்டனை’**, **‘நெஞ்சுக்கு நீதி’**, **‘நியாயத் தராசு’**, **‘இது எங்கள் நீதி’**, **‘சட்டம் ஒரு விளையாட்டு’** என்ற பெயர்களோடு பல படங்களும், அவ்வாறு பெயரிடப்படாத, அவரது பெரும் பாலான திரைப்படங்களிலும் நீதிமன்றக் காட்சிகள் இடம் பெற்றுள்ளதோடு, அந்நீதி மன்றங்களில் அவரது கதைமாந்தர்கள் நீதியை நிலைநாட்டப் போராடுவதையும் நாம் காண்கிறோம்.

இது, அவர் திரைக்கதை வசனம் எழுதிய சமூகத் திரைப்படங்களில் நாம் காணக்கூடிய காட்சிகள் என்றால், அவர் கதை, திரைக்கதை வசனம் எழுதிய சரித்திர, மன்னராட்சிக் காலத் திரைப்படங்களில் இந்நீதிமன்றக் காட்சிகளுக்கு நிகராக அரசவைகளில் அநீதியை எதிர்த்து நாயகனோ, நாயகியோ அல்லது பிறரோ வாதிடும் காட்சிகள், தொடர்ந்து கலைஞரால் படைக்கப்பட்டு வந்திருப்பதை நாம் காண்கிறோம். ஆக எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால், **‘மந்திரி குமாரி’** (1950) திரைப்படத்தில் வீரமோகன் (எம்.ஜி.ஆர்.) கைது செய்யப்பட்டு சங்கிலியால் பிணைக்கப்பட்டு, குற்றவாளியாக அரசர் முன் நிறுத்தப்படும் காட்சியில், மதகுரு (நம்பியார்) வுக்கும் அவரது அடிமையாக விளங்கும் மன்னனுக்கும் எதிராக வீரமோகன் வாதிடும்போது, 1950-களின் கால தமிழ்நாட்டின் அரசியல் சூழலை நம் கண்முன் கொண்டுவந்து

> **நீதிக்கான போராட்டத்தைத் திரையில் நடத்திக்காட்டியது மட்டுமல்ல, தன் வாழ்நாள் முழுதும் அரசியலிலும் அவர் நடத்திக்காட்டினார்.**

நிறுத்தி, பார்ப்பனர்களின் சூழ்ச்சியையும், ஆட்சி அதிகாரம் அவர்களின் கைப்பாவையாகச் செயல்படுவதையும், கலைஞரின் வசனங்கள் அம்பலப்படுத்துவதைக் காண்கிறோம்.

அதே போல **‘மனோகரா’**வில் சிவாஜி கணேசன் பேசுகின்ற “வசந்த சேனை அதிகாரத்திற்கு எதிராக உண்மையைப்பேசுவது, அநீதியை எதிர்த்துப் போராடி நீதியை நிலை நாட்டுவது என்பதற்கான களமாக, பழைய அரசவை முதல் நவீன நீதிமன்றம் வரை காட்சிப்படுத்தும் விதமாக, அவர் திரைக்கதை வசனத்தை எழுதியுள்ளதைக் காண்கிறோம்.

### அறிவுப் பிரச்சாரமே ஆயுதம்!

வன்முறையில் நம்பிக்கை அற்ற, அறிவுப்புரட்சியை மட்டுமே நம்புகின்ற, அறிவுப் பிரச்சாரம் ஒன்றையே ஆயுதமாகக் கொண்டு செயல்படுகின்ற திராவிட இயக்கத்தின் கொள்கையில் ஊறிப்போன தலைவர், ஒருவரின் சிந்தனை இவ்வாறுதான் வெளிப்படும் என்பதைச் சற்று சிந்தித்தால், நம்மால் புரிந்து கொள்ள முடியும். தன்மீதான வழக்குகளையும், நீதிமன்ற விசாரணைகளையும் மிக்க மகிழ்ச்சியுடன் தந்தை பெரியார் ஏற்றுக் கொண்டு, அவற்றை தமது கொள்கைகளை விளக்குவதற்கான, பிரச்சாரம் செய்வதற்கான இடமாகவும், வாய்ப்பாகவும் நீதிமன்றங்களைப் பயன்படுத்திய வரலாற்றை அறிந்தவர்களுக்கு, கலைஞரின் இந்த நீதிமன்ற, அரசவைக்காட்சி வாதங்கள் மீதான ஈடுபாட்டைப் புரிந்து கொள்வது சிரமமில்லை.

கலைஞருக்கு மிகப்பெரும் புகழைப் பெற்றுத்தந்த ‘மனோகரா’ திரைப்படத்தில் இடம்பெற்ற அரசவை விவாதக் காட்சியையும், ‘பராசக்தி’ திரைப்படத்தில் வருகின்ற நீதிமன்றக் காட்சியையும் சற்று சிந்தித்துப் பார்த்தால், கலைஞரின் சமூக, அரசியல் தெளிவினையும், அவரது கூர்மையான விமர்சனத் திறத்தையும், அவரது மொழி ஆளுமைத்திறத்தையும், திராவிட இயக்க அரசியலை, மக்களிடம் கொண்டு சேர்க்கும் கலைத்திறத்தையும் கண்டு நாம் வியந்து போவோம். அன்றைய சமூக வரலாற்று, அரசியல் பின்புலங்களைத் துண்டித்துவிட்டு, வெறுமனே திரைப்படத்தின் கதையோடு மட்டுமே கலைஞரின் வசனங்களைப் புரிந்து கொள்வோரும், புகழ்வோரும் உண்டு.

ஆனால், அத்திரைப்படம் வெளிவந்த காலம், அன்றைய சமூக, அரசியல் சூழல், அன்றைய ஆட்சியாளர்களது சட்ட திட்டங்கள் ஆகியவற்றோடு கலைஞர் எழுதிய வசனங்களை இணைத்துப் பார்த்தோமானால், கலைஞரின் வசனங்கள் ஓர் அரசியல் புரட்சியைத் தோற்றுவிக்கும் நோக்கத்தோடு எழுதப்பட்டிருப்பதையும், அது அவ்வாறே மக்களின் மனதில் ஓர் உத்வேகத்தையும் மக்களிடையே ஓர் எழுச்சியையும் ஏற்படுத்தியதை நாம் பார்க்க முடியும்.

வட்டமிடும் கழுகு” என்ற அந்தப் புகழ்பெற்ற வசனங்கள் அன்றைய தமிழ்நாட்டின் மீதான வடவரின் ஆதிக்கத்தையும் பொருளாதாரச் சுரண்டலையும் மக்களுக்குச் சரியாக உணர்த்தியது என்றே சொல்ல வேண்டும். அவ்வாறே கலைஞரின் ‘பராசக்தி’ திரைப் படத்தில் நீதிமன்றத்தில் சிவாஜி பேசும் வசனங்கள் 1952 -ஆம் ஆண்டு கால தமிழ் நாட்டின் அவல நிலையைச் சுட்டிக்காட்டிய துடன், அபலைப்பெண்களின் கண்ணீர், பிச்சைக்காரர்களின் வறியநிலை, கள்ளச்சந்தை வியாபாரிகளின் அட்டகாசம் போன்றவற்றைத் தோலுரித்துக் காட்டியது. மேலும்,

‘கோயில் கொடியவர்களின் கூடாரமாகக்கூடாது’ என்ற வசனம் அன்று எவ்வளவு பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அதனால்தான் ‘பராசக்தி’ திரைப்படத்துக்குத் தடை விதிக்க ஆதிக்கவாதிகள் முயன்றனர்.

### ‘நிரபராதிகளின் பலிபீடமல்ல’

அதேபோல கலைஞரின் கதை, திரைக்கதை வசனத்தில் கிருஷ்ணன் பஞ்சு இயக்கத்தில் மு.க.முத்துவின் அருமையான நடிப்பில் 1972-ஆம் ஆண்டு திரைக்கு வந்த ‘பிள்ளையோ பிள்ளை’ திரைப்படத்திலும் நீதிமன்றக் காட்சிகள் மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டு, கலைஞரின் வசனங்கள் அற்புதமாக ஒலிப்பதைக் காண்கிறோம். எடுத்துக்காட்டுக்கு ஒன்றே ஒன்று மட்டும்,

*அரசு வழக்குரைஞர்: சட்டத்தின் சந்நிதானம்தான் நீதிமன்றம். அதற்கு வாதியின் வழக்குரைஞர்: ஆம், சட்டத்தின் சந்நிதானம்தான். ஆனால், நீதிமன்றம் நிரபராதிகளின் பலிபீடமல்ல!*

இவ்வாறு எடுத்துச் சொல்வதற்கு இன்னும் ஏராளமான திரைப்படக்காட்சிகள் உள்ளன. இதேபோல் பின்னாளில் (1987-இல்) கலைஞர் திரைக்கதை வசனம் எழுதிய **‘நீதிக்குத் தண்டனை’** திரைப்படத்தில் இடம்பெற்ற வசனங்களால் கோபம் கொண்ட ஆட்சியாளர்களால் திரைப் படத்திற்கு நெருக்கடி கொடுக்கப்பட்டது என அப்படத்தின் இயக்குனர் எஸ்.ஏ.சந்திரசேகர் குறிப்பிட்டுள்ளார் (சாய் வித் சித்ரா நேர்காணல்), அந்தளவுக்கு **‘நீதிக்குத் தண்டனை’**யில் கலைஞரின் திரைக்கதையும் வசனமும் 1980-களின் காவல்துறை அராஜகத்தைப் படம் பிடித்துக்காட்டுவதாக இருந்தது.

இதற்கும் முன் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் இயக்கி, 1952-இல் வெளிவந்த ‘பணம்’ திரைப்படத்திலும் நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிறுத்தப்படும் உமாபதி (சிவாஜி) நிரபராதி என்று நிரூபிக்கப் பட்டு விடுதலையாவதுடன் படம் நிறைவு பெறுவதை நாம் காண்கிறோம், அதாவது, சமூக அரசியல் திரைப்படங்களில் மட்டுமல்ல, கலைஞர் திரைக்கதை வசனம் எழுதிய குடும்பத்திரைப்படங்கள் என்பனவற்றிலும் நீதிமன்றக் காட்சிகளும், அங்கு நடைபெறும் வாதங்களும் மிகச் சிறப்பாக இடம்பெற்றதைக் காண முடிகிறது. இதற்குப் பின்னர், 1988-ஆம் ஆண்டு கலைஞர் திரைக்கதை வசனம் எழுதி, வி.எம்.சி.ஹனீபா இயக்கத்தில் வெளிவந்த **‘பாசப் பறவைகள்’** திரைப்படத்தை மிகச்சிறந்த உதாரணமாகச் சொல்லலாம். இத்திரைப்படத்தில் வழக்குரைஞர்களாகத் தோன்றி நடிகைகள் லட்சுமியும் ராதிகாவும் நீதியை நிலைநாட்ட வாதிடும் காட்சிகள் வெகு சிறப்பாகப் படமாக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு பல எடுத்துக்காட்டுகளை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். ஏனென்றால், கலைஞர் வசனமெழுதிய 70 படங்களில் நிச்சயமாக, பாதிக்கும் மேலான திரைப்படங்களில் நீதிமன்றக்காட்சிகளும் வழக்கறிஞர்களின் வாதங்களும் இடம்பெற்றிருக்கும் என்று உறுதியாகக் கூறலாம். இவ்வாறு நீதிக்கான போராட்டத்தைத் திரையில் நடத்திக்காட்டியது மட்டுமல்ல, தன் வாழ்நாள் முழுதும் அரசியலிலும் அவர் நடத்திக்காட்டினார். அதுமட்டுமல்ல, அவர் இறந்த பிறகும் நீதிக்கான போராட்டத்தை நடத்தியே, தனக்கான நினைவிடத்தைப் பெற்றார் என்பதையும் மக்கள் அறிவர்.

**...காட்சி விரியும்**

## பெண் குழந்தைகளைக் காக்க, சீரிய முன்னெடுப்பு!

கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோயை முற்றிலுமாக ஒழிக்கும் வகையில், 9 முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்துப் பெண் குழந்தைகளுக்கும் ஹெச்.பி.வி. தடுப்பூசி செலுத்த 36 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என தமிழ்நாடு அரசு 2025-26 நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளது. பெண்ணிய செயற்பாட்டாளர்களும் மருத்துவத் துறையினரும் தமிழ்நாடு அரசின் அறிவிப்பை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

உலகெங்கும் பெண்களை அச்சுறுத்தும் கொடூர நோய்களில் ஒன்றாக கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் உருவெடுத்து வருகிறது. 2022-ஆம் ஆண்டில் மட்டும் 6 லட்சத்து 60 ஆயிரம் பேருக்குக் கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டு, 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் உயிரை இழக்க நேர்ந்தது. இந்தியாவைப் பொறுத்தவரையில் 2020-ஆம் ஆண்டு கணக்குப்படி ஒரு லட்சம் பெண்களில் 18 பேருக்கு கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் உயிரிழப்பு விகிதமும் 11.5 என்ற அளவில் அதிகமாக உள்ளது.

கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் முற்றிய பின் தீர்வு காண்பதென்பது, இன்றைய மருத்துவ உலகில் சாத்தியமற்ற ஒன்று. ஆனால், வருமுன் காக்கும் மருந்துதான் ஹெச்.பி.வி. எனப்படும் ‘ஹ்யூமன் பாப்பிலோமா’ தடுப்பூசி. சுமார் 200 விதமான வைரஸ்களில் இருந்தும், பரம்பரை நோய்களில் இருந்தும் காக்கிறது. இதனால், கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் குடும்பத்தில் முந்தைய தலைமுறையில் யாருக்காவது இருந்திருந்தால், அடுத்தடுத்த தலைமுறைக்கும் அந்நோய்த் தாக்குதல் தொடர்வதை, இத்தடுப்பூசி தடுக்கிறது.

ஏற்கெனவே, இந்த தடுப்பூசி சந்தையில் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தாலும், நாடு தழுவிய அளவில் ஹெச்.பி.வி. தடுப்பூசி இயக்கத்தைச் செயல்படுத்துவது தொடர்பாக, ஒன்றிய அரசின் செயல்பாடே இன்னும் ஆலோசனை மட்டத்தில்தான் உள்ளது. ஆனால், தமிழ்நாடு அரசு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக, கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் இல்லாத சமூகத்தைப் படைப்பதற்காக தடுப்பூசி இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறது. இந்த அக்கறைதான் ‘திராவிட மாடல்’.

## ஃப்ளாஷ்பேக்



### இராணிப்பேட்டையில் தளபதி!



கே.வி.குப்பம் சி.கோபி

1990-ஆம் ஆண்டு அன்றைய வேலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.கே.சுந்தரமூர்த்தி அவர்கள் ஏற்பாட்டில், இராணிப்பேட்டை இளைஞர் அணியைச் சேர்ந்த தொண்டர் ஒருவரின் திருமணத்திற்கு, அன்றைய மாநில இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்தார். கே.வி.குப்பம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான், தளபதி அவர்களை வரவேற்று சிறப்பு செய்தேன். அப்போது மாவட்டக் கழகச் செயலாளரான அண்ணன் தி.அ.முகமது சகி, ஆற்காடு பூபால இளங்கோ, ஏ.சி.தயாளன் உடனிருந்தனர்.

**– கே.வி.குப்பம் சி.கோபி, மாநிலத் துணைச் செயலாளர், தி.மு.க. கலை இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, வேலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு — மொழிவழி மாநிலங்கள் மசோதா!

1956-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 10-ஆம் தேதி மொழிவழி மாநிலங்கள், இருமொழி மாநிலங்கள், ஒன்றிய ஆட்சிப் பகுதிகள், எல்லைத் தகராறுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மாநிலப் புது அமைப்பு மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. நவம்பர் மாதம் மசோதா நடைமுறைக்கு வந்தது. ஆனால், பம்பாய் மாநிலம் (குஜராத், மகாராஷ்டிரம்) இருமொழி மாநிலமாக இருக்க விரும்பவில்லை என்பதால், கடும் எதிர்ப்புகள் கிளம்பின.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131